PRIMARK

## TELL US

**எங்களுடைய இலவச TELL US ஹாட்லைன், இணையதளம் அல்லது மொபைல் ஆப் பயன்பாட்டைப் பயன்படுத்தி நீங்கள் ப்ரைமார்க்கைத் தொடர்புகொள்ளலாம், உங்களுக்கு பணியிடத்தில் ஏதேனும் பிரச்சனை இருந்தால், உங்கள் பிரச்சனைகளை அநாமதேயமாகவும், இரகசியமாகவும் கேட்க ப்ரைமார்க் தயாராக உள்ளது.**

### TELL US மூலம் எங்களை யாரெல்லாம் தொடர்புகொள்ளலாம்

Tell Us ஹாட்லைன், இணையதளம் அல்லது மொபைல் ஆப் பயன்பாட்டைப் பயன்படுத்தி யார் வேண்டுமானாலும் ப்ரைமார்க்கைத் தொடர்புகொள்ளலாம். எடுத்துக்காட்டாக: முழுநேர, பகுதி நேர அல்லது நிலையான, சாதாரண அல்லது ஏஜென்சி பணியாளர், வீட்டு வேலை செய்பவர், இரண்டாம் நிலை, பயிற்சி பெறுபவர், தன்னார்வலர்கள், உற்பத்தி ஊழியர்கள் அல்லது சமையலறை ஊழியர்கள்

### TELL US மூலம் எங்களிடம் நீங்கள் எதைப்பற்றிச் சொல்லலாம்

பணியிடத்தில் நீங்கள் அல்லது உங்கள் சக பணியாளர்கள் தகாத முறையில் அல்லது நியாயமற்ற முறையில் நடத்தப்படுவதாக கருதினால் அல்லது மனித உரிமைகள், நெறிமுறைப் பிரச்சனைகள் மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பான ப்ரைமார்க்கின் கொள்கைகளை மீறுவது உட்பட, பணியில் நேர்மையற்ற, சட்டவிரோத அல்லது ஆபத்தான நடத்தையை நீங்கள் கண்டிருந்தால் TELL US மூலம் தெரிவிக்கலாம்.

உதாரணமாக, உங்கள் பணியிடம் பாதுகாப்பாக இருப்பதாக நீங்கள் உணரவில்லை, நீங்கள் வாய்மொழி அல்லது உடல் ரீதியான துஷ்பிரயோகத்தை அனுபவித்திருக்கிறீர்கள் அல்லது உங்கள் ஊதியம் சரியாக வழங்கப்படவில்லை போன்றவற்றையும் தெரிவிக்கலாம்.

**அவசரநிலை ஏற்பட்டால், உள்ளூர் அவசர சேவைகளை அழைக்கவும்:** [112]

உங்களின் வழக்கமான பணியிடக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை (குறைகளை தீர்க்கும் வழிமுறைகள் அல்லது ஏதேனும் தொழிற்சங்கம் அல்லது தொழிலாளர் குழு செயல்முறை, கிடைக்கும் இடங்களில்) TELL US மாற்றாது என்பதை நினைவில் கொள்ளவும், மேலும் உங்கள் மேலாளர், மேற்பார்வையாளர் அல்லது பணியாளர் குழுவிடம் உங்களால் முடிந்தால் உங்கள் பிரச்சனையைத் தெரிவிக்குமாறு நாங்கள் பரிந்துரைக்கிறோம்.

### உங்கள் அடையாளம்

TELL US மூலம் எங்களுடன் ஒரு பிரச்சனையைப் பகிர்ந்து கொண்டால், உங்கள் அடையாளத்தை இரகசியமாக வைத்திருப்போம் மற்றும் உங்கள் புகாரினால் ஏற்படும் எதிர்மறையான விளைவுகளைத் தடுப்போம்.

### TELL US மூலம் எங்களிடம் எப்படித் தெரிவிப்பது

தொலைபேசி ஹாட்லைனைப் பயன்படுத்தி, இணையதளத்திற்குச் சென்று அல்லது மொபைல் ஆப் பதிவிறக்கி TELL US மூலம் நீங்கள் எங்களிடம் கூறலாம். விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| **எங்கள் தொலைபேசி ஹாட்லைன் எண்ணை அழைப்பதன் மூலம்:** | **பின்வரும் இணைய முகவரி மூலம்:** | **பின்வரும் QR குறியீட்டைப் பயன்படுத்தி மொபைல் ஆப் பதிவிறக்குவது மூலம்:** |
|---|---|---|
| TELL US கொள்கைகள் மற்றும் போஸ்டர்களில் குறிப்பிடப்பட்டுள்ள உள்ளூர் இலவச சேவை எண்ணை பயன்படுத்தலாம் | https://primark.speakup.report/tellus | |
| **வழிநடத்தப்படும்போது, பின்வரும் அணுகல் குறியீட்டை உள்ளிடவும்: 106502** | | |
| உங்கள் உள்ளூர் மொழியில் குரல் செய்தியைப் பதிவு செய்யவும் அல்லது உங்கள் பிரச்சனையை விவரிக்கும் வகையில் செய்தியாக எழுதவும் | | |
| நீங்கள் ஒரு தனிப்பட்ட வழக்கு எண்ணைப் பெறுவீர்கள்; கூடுதல் தகவல் அல்லது பின்தொடர்தல்களில் உதவ இது தேவைப்படும் | | |
| 72 மணி நேரத்திற்குள் நீங்கள் ஒப்புகையைப் பெறுவீர்கள், பின்னர் ப்ரைமார்க் இந்த விஷயத்தை ஆராயும் | | |

**வழக்கின் முடிவு TELL US சிஸ்டத்தில் பகிரப்படும், எனவே முன்னேற்றத்தைப் பற்றி அறிய, தொடர்ந்து உள்நுழைந்து சரிபார்க்க மறக்காதீர்கள்.**

*எங்களுக்கு உங்கள் மேல்,*
*மற்றும் உங்கள் பிரச்சனைகளின் மேல் அக்கறை இருக்கிறது*